**மீயுயர் நீதிமன்றம் கட்டிடத்தொகுதியின் முகாமைச் சபை 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதியின் முகாமைச் சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு உரிய கணக்கேடுகளைப் பேணியுள்ளது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதியின் முகாமைச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைப்பாட்டினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 கணக்குகள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி அமைந்துள்ள காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 3,543,248 பெறுமதியான 73 கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 3,081,082 கூட்டுமொத்தமான 67 மீதிகள் 1 இலிருந்து 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமும் ரூபா 462,166 கூட்டுமொத்தமான மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமும் நிலுவையாகக் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 470,383 கூட்டுமொத்தமான 41 கடன்கொடுத்தோர் மீதிகளில் ரூபா 192,221 கூட்டுமொத்தமான 24 மீதிகள் 1 இலிருந்து 5 ஆண்டுகள் வரையான காலமும் ரூபா 278,162 கூட்டுமொத்தமான 17 மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமும் தீர்த்துவைக்கப்படாது காணப்பட்டன.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) நி.பி 371 மற்றும் 2008 மே 28 ஆந் திகதிய 428 ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபம் | சில்லறைக் காசு கட்டுநிதி ரூபா 7,500 ஆக இருந்த போதிலும் சபையினால் ரூபா 30,000 தொகை சில்லறைக் காசு கட்டுநிதியாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 2004/01 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | வரைவு ஆண்டறிக்கை ஒன்று கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க நிலையான சொத்துக்களை கணக்குவைத்தல் திறைசேரி சுற்றுநிருபம் | முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 02. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------------------------

### 2.1 நிதிசார் மீளாய்வு

---------------------------

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

----------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முகாமைத்துவச் சபையின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 894,478 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,919,119 ஆக இருந்தது. இதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறையில் ரூபா 2,024,641 ஆல் வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 02 மில்லியனால் குறைவடைதல் காரணமாக பற்றாக்குறை குறைவடைந்தமைக்கு தாக்கமளித்துள்ளது.

#### 2.1.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

--------------------------------------------------------------------------

சபையினால் 2010 ஆம் ஆண்டிற்காக மின்சாரம் மற்றும் நீர் பட்டியல் கட்டணமாக முறையே ரூபா 27,323,893 மற்றும் ரூபா 2,130,605 செலுத்தப்பட்டிருந்தன. இக்கட்டணத்துள் உச்ச நீதி மன்ற கட்டிடத் தொகுதியில் பேணப்பட்டு வந்த ஏனைய நிறுவனங்களுக்குரிய நீர் மற்றும் மின்சார கட்டணங்களும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அந்நிறுவனங்களின் கட்டிட வாடகையினையும் மற்றும் உரிய நீர் மின்சாரக் கட்டணங்களையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

#### 2.2.1 செயலாற்றல்

---------------------

செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், ஆண்டின் போது அமுல்ப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட 17 செயற்திட்டங்களில் 12 செயற்திட்டங்கள் மாத்திரம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் 11 செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

### 2.2.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக திறைசேரியிடமிருந்து மூலதன நிதி ஏற்பாடாக ரூபா 4,550,000 சபைக்கு கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 1,650,000 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 03. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) பொருட் பதிவேடு

(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்